செ.வெ.எண்: 19 நாள்: 10.08.2021

**உலக தாய்ப்பால் வாரவிழாவை முன்னிட்டு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தாய்ப்பால் விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உலக தாய்ப்பால் வாரவிழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தாய்ப்பால் விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்து, கர்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு தாய்ப்பால் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு மடிப்பேடுகளை வழங்கினார்.

உலக தாய்ப்பால் வார நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக தாய்ப்பால் விழிப்புணர்வு மற்றும் கொரோனா விழிப்புணர்வு தொடர்பான ரங்கோலி, வரைபடங்கள், அங்கன்வாடி பணியாளர்களால் உருவாக்கப்பட்டதை பார்வையிட்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட பணியின்கீழ் பணிபுரியும் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையில், நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் தாய்ப்பால் முக்கியத்துவம் பற்றிய உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பின்னர் குழந்தை பிறந்த 1 மணி நேரத்திற்குள் முதல் உணவாக தாய்ப்பால் (சீம்பால்) கொடுக்கவும், 6 மாதம் வரை தண்ணீர் கூட கொடுக்காமல் தாய்பால் மட்டுமே கொடுக்க வேண்டும், 6 மாதத்திற்கு பிறகு தாய்ப்பாலுடன் இணை உணவு சேர்த்து கொடுக்க வேண்டும். மேலும் 2 வயது வரை தாய்ப்பால் தொடர்ந்து கொடுக்கவும் தாய்ப்பால் கொடுப்பதன் மூலமாக குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தாய்க்கு ஏற்படும் நன்மை பற்றியும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கர்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு, அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ.முகமது ஷாநவாஸ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, இணை இயக்குநர் திருமதி.D.ராணி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.தனபால், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.து.மகாராணி, வட்டார மேற்பார்வையாளர்கள், ஒருங்கிணைப்பாளாகள், வட்டார உதவியாளாகள், அங்கன்வாடி பணியாளர்கள், உதவியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**